**செப்டம்பர் – 20**

# TNPSC துளிகள்

- தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் (AB-NHPM: Ayushman Bharat– National Health Protection Mission) -ஐ செயல்படுத்தும் தேசிய சுகாதார நிறுவனமானது (NHA – National Health Agency) பயனாளர்கள் தங்கள் பதிவுகளை சோதித்துக் கொள்ள வலைதளமொன்றையும் உதவி எண்ணெயும் தொடங்கியுள்ளது.
    - இதற்கான இணையதளம் 'mera.pmjay.gov.in' மற்றும் உதவி எண் 14555 ஆகும்.
- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் இந்திப் பத்திரிக்கையான 'வாணி'யானது ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார் விருதைப் வென்றுள்ளது. இவ்விருதானது துணைக் குடியரசு தலைவர் வெங்கையா நாயுடுவால் வழங்கப்பட்டது.
- நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (NICL – National Insurance Company Limited) நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக தஜிந்தர் முகர்ஜி பதவியேற்றுள்ளார். இதற்கு முன்னர் இவர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் மற்றும் மூத்த எழுத்துறு அலுவலராகவும் அமர்த்தப்பட்டிருந்தார்.
- இந்தி திரைப்பட நடிகர்களான வருண் தவான் மற்றும் அனுஷ்கா சர்மா ஆகியோர் பிரதம மந்திரி தலைமையிலான திறன் இந்தியா திட்டத்தை ஊக்குவிக்கவும், வலியுறுத்தவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.
- இந்திய அரசானது உத்தரகாண்ட் தொழிலாளர் மேம்பாட்டு திட்டத்திற்காக (UKWDP - Uttarakhand Workforce Development Project) உலக வங்கியுடன் 74 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவிக் கடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சுங்க சோதனை மையம்

- இந்தியாவின் முதல் "சுங்க சோதனை மையம்" சென்னையின் திருவொற்றியூரில் தொடங்கப்பட்டது.
- இது துறைமுகத்தின் முன்பு பெரிய அளவில் வாகன தேக்கத்தையும் போக்குவரத்து நெரிசலையும் குறைக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## முத்தலாக் -அவசர சட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்


- தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் நாடாளுமன்ற இரு அவையிலும் நிறைவேற்ற முடியாமல் தோல்வியடைந்த முத்தலாக்கை தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கும் அவசரச் சட்டத்திற்கு மத்திய

அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது ஆனால் வெற்றியடைந்து மாநிலங்களவையில் நிறைவேற்றப்படாமல் தடங்களில் உள்ளது.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முத்தலாக் முறையை உச்ச நீதிமன்றமானது சட்டவிரோதமென்றும் அரசியலமைப்பிற்கு எதிரானதென்றும் தீர்ப்பளித்தது.
- இந்த அவசரச் சட்டமானது முஸ்லீம் பெண்கள் திருமண உரிமைப் பாதுகாக்கும் சட்டத்தில் உள்ளது போலவே அனைத்து ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது.

## குழந்தைகள் இறப்பு விகிதம் மற்றும் நிலவர அறிக்கை – 2018

- யுனிசெப் மற்றும் ஐ.நா-வின் குழந்தைகள் இறப்பு மதிப்பீட்டிற்கான சர்வதேசக் குழுவானது குழந்தைகள் இறப்பு விகிதம் மற்றும் நிலவர அறிக்கை – 2018ஐ வெளியிட்டுள்ளது. இது உலகமெங்கிலும் உள்ள குழந்தைகளின் முழு நிலைமை மற்றும் அவர்களின் இறப்பு விகிதங்களின் நிலையைக் காட்டுகிறது.
- இந்த அறிக்கையின்படி ஆப்பிரிக்காவின் சஹாரா பகுதிகளில் உலகின் அதிக அளவாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.




- 2017-ஆம் ஆண்டில் இந்தப் பகுதி 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தை சராசரியாக 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு 76 என்ற அளவில் கொண்டிருந்தது.
- இந்தியாவில் 2012-ல் ஏறக்குறைய 22%-லிருந்த 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு 2017-ல் 18%-ஆக குறைந்துள்ளது. மேலும் ஒரு


மில்லியன்களுக்கு (பத்து லட்சம்) குறைவாக (9,89,000) இருப்பது இதுவே முதன்முறையாகும்.

- 2017-ல் இந்தியாவில் சுமார் 8,02,000 குழந்தை இறப்புகள் பதிவாகியுள்ளன. இது கடந்த 5 ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவாகும்.
- ஆனால் இந்தியாவானது குழந்தை இறப்புகள் அளவில் இன்னும் முன்னிலையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து நைஜீரியா, பாகிஸ்தான் மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகள் உள்ளன.
- 2017-ஆம் ஆண்டில் உலகளாவிய அளவில் 15 வயதிற்குட்பட்ட 6.3 மில்லியன் என்று கூறப்பட்ட அளவில் குழந்தைகள் இறந்திருக்கின்றன. இது ஒவ்வொரு 5 வினாடிக்கும் ஒரு குழந்தை இறப்புக்கு சமமாகும்.
- இந்த அறிக்கையானது, மொத்த இறப்புகளில் 80% அல்லது 5.4 மில்லியன் இறப்புகள் குழந்தைகளின் முதல் 5 வயதிற்குள் ஏற்படுவதாக குறிப்பிடுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வங்கிகள் இணைப்பிற்கான முன்மொழிவு

- மத்திய அரசானது அரசுக்கு சொந்தமான பரோடா வங்கி, தேனா வங்கி மற்றும் விஜயா வங்கி ஆகியவற்றை இணைத்து இந்தியாவின் மூன்றாவது பெரிய வங்கியை உருவாக்க முன்மொழிந்துள்ளது.




- புதிதாக இணைக்கப்பட்ட நிறுவனமானது ரூ.14.82 லட்சம் கோடி மொத்த வர்த்தகத்துடன் நாட்டில் SBI மற்றும் HDFC வங்கிகளுக்கு அடுத்து 3 வது மிகப்பெரிய வங்கியாக இருக்கும்.
- இந்த இணைப்பானது கீழ்க்காண்பனவற்றின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.
    - நிதியமைச்சர் அருண் ஜெட்லி தலைமையிலான குழுவால் முன்மொழியப்பட்ட மாற்று வழிமுறை.

   - பொதுத்துறை வங்கியல் துறையில் சீர்திருத்தங்கள்.

- இந்த இணைப்பால் நாட்டின் பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கையானது 19 ஆக குறையும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## 3 FDC மருந்துகள் மீதான தடை நீக்கம்

- உச்ச நீதிமன்றமானது 'குறிப்பிட்ட அளவு கலவை மருந்துகளான' சாரிடான், பிரிட்டான் (இருமல், சளி நீக்க மருந்து) மற்றும் டார்ட் ஆகிய 3 மருந்துகளுக்கான தடையை நீக்கி விற்பனையை அனுமதித்துள்ளது.
- இவையனைத்தும் 1988 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. எனவே தடை செய்யப்பட்ட மருந்துகள் பட்டியலில் இருந்து இவற்றுக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டுமென வாதிடப்பட்டது.




- இந்த மருந்துகள் செப்டம்பர் 12-ல் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தினால் விற்பனை மற்றும் உற்பத்திக்கு தடைசெய்யப்பட்ட 328 FDC (Fixed Dose Combination) மருந்துகளின் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.
- FDC மருந்துகள் என்பவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகள் ஒரு நிலையான விகிதத்தில் ஒரே மருந்தாக இணைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்ளப்படும் மருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது.

## சைக்ளோான் 30 – இந்தியாவின் மிகப்பெரிய துகள் முடுக்கி

- கொல்கத்தாவில் உள்ள VECC என்ற நிறுவனத்தில், இந்தியாவின் மிகப்பெரிய துகள் முடுக்கியான 'துகள் முடுக்கி–30' ஆனது மருத்துவ பயன்பாட்டிற்காக நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது இந்திய அணுசக்தித் துறையின் (DDE) கீழ் உள்ளது. மேலும் இது 2019-ல் செயல்பட உள்ளது.
- இந்த வசதியானது புற்றுநோய் சிகிச்சைக்காக நோயறிதல் வசதியையும் அதற்கு சிகிச்சையளிக்கும் பயன்பாடுகளுக்கு மலிவு விலையில் கதிரியக்க ஓரகத் தனிமங்களையும் அதன் தொடர்புடைய கதிரியக்க மருந்துகளையும் வழங்கக்கூடியது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் விருதுகள்

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் 2017-18 விருதுகளை புதுடெல்லியில் வழங்கியது.
- இது 2018 செப்டம்பர் 15 அன்று பிரதம மந்திரி ஸ்வச்சத்தா ஹை சேவா பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டது.
- இந்த ஆண்டு முதன்முறையாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மட்டுமல்லாது தனியார் பள்ளிகளுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.
- கீழ்க்காண்பனவற்றிற்கு அதிகபட்ச 'தேசிய ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் விருது' பெற்ற பள்ளிகளை கொண்டுள்ளதற்காக அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்பட்டது
    - புதுச்சேரி, தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசம் ஆகிய 4 மாநிலங்கள்.
    - பாண்டிச்சேரி, ஸ்ரீகாகுளம், சண்டிகார், ஹிசார், காரைக்கால், லதூர், நெல்லூர், தெற்கு கோவா, வடோதரா ஆகிய 9 மாவட்டங்கள்
- ஸ்வச் வித்யாலயா புரஸ்கார் விருதானது, நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை ஆகியவற்றில் முன்மாதிரியான வேலைகளைச் செய்துள்ள பள்ளிகளை கௌரவிப்பதாகும்.

## மெக்ஸிகோவின் மிக உயர்ந்த குடிமகன் கௌரவப் பட்டம்

- 128-வது மெக்ஸிகோ தினத்தன்று இந்தியாவின் மெக்ஸிகோவிற்கான தூதுவர் மெல்பா பிரியா அவர்களால் Dr. ரகுபதி சிங்கானியாவிற்கு 'மெக்ஸிகன் ஆர்டர் ஆப் தி ஆஸ்டெக் ஈகிள்' (Mexican order of the Aztec Eagle) பட்டம் வழங்கப்பட்டது.
- இது மெக்ஸிகோ அரசால் மெக்ஸிகோ நாட்டை சேர்ந்தவரல்லாதோர்க்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவப் பட்டமாகும்.
- இவர் JK டயர்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆவார்.
- அவரது முன்மாதிரியான தலைமையையும், மனித குலத்திற்கு செய்த குறிப்பிடத்தகுந்த சேவைகளையும், இந்தியாவிற்கும் மெக்ஸிகோவிற்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் அவரது முயற்சிகளுக்காகவும் இவ்விருது வழங்கப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய பாரா விளையாட்டுகள்

- 2022 ஆம் ஆண்டில் ஆசிய பாரா விளையாட்டுகளின் நான்காவது பதிப்பை சீனாவின் ஹான்ங்ஷோ நடத்தும் என ஆசியன் பாரா ஒலிம்பிக் குழு உறுதி

செய்துள்ளது.

- மூன்றாவது ஆசிய பாரா விளையாட்டு போட்டி 2018 ஆனது இந்தோனோசியாவின் ஜகார்த்தாவில் நடத்தப்படவிருக்கிறது.

## சிங்கப்பூர் கிராண்ட் பிரிக்ஸ் 2018

- மெர்சிடிஸ் ஹாவில் ஹாமில்டன் என்பவர் சிங்கப்பூரின் மெரினா பே ஸ்ட்ரீட் சர்க்யூட்-ல் சிங்கப்பூர் கிராண்ட் பிரிக்ஸை வென்றார்.
- அவரைத் தொடர்ந்து இரண்டாவது இடத்தை ரெட் புல்லின் மேக்ஸ் வெர்ஸ்டப்பேன் பிடித்தார்.
- ஃபெராரியின் செபாஸ்டின் வெட்டேல் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

## மெட்வெட் சர்வதேச மல்யுத்த போட்டிகள்

- பெலாரஸ் நகரில் உள்ள மின்ஸ்க்கில் நடைபெற்ற சர்வதேச மல்யுத்த போட்டியின் இறுதிப் போட்டியில் ஹங்கேரி வீரரான மரியன்னா சாஸ்டினிடம் தோல்வியுற்று இந்திய மல்யுத்த வீரர் சாக்ஷி மாலிக் (62 கிலோ பிரிவு) வெள்ளி பதக்கம் வென்றார்.
- இந்தியாவின் பூஜா தண்டா 57 கிலோ பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

# இதரச் செய்திகள்

## உலக ஒலிம்பிக் விளம்பரதாரர்

- 2021 மற்றும் 2028-க்கிடையேயான 10 ஆண்டுகால 4 விளையாட்டுக்கான உலக ஒலிம்பிக் விளம்பரதாரராக ஜெர்மனைச் சேர்ந்த காப்பீட்டு நிறுவனமான அலையன்ஸ் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த காப்பீட்டு நிறுவனம் IOC-ன் 14-வது விளம்பரதாரராக இணைந்துள்ளது. கீழ்க்கண்ட விளையாட்டுகளை இது வழங்கும்.
    - 2024 ல் பாரிஸில் நடைபெறும் கோடைக்கால ஒலிம்பிக்
    - 2028 ல் ஏஞ்சல்ஸில் நடைபெறும் கோடைக்கால ஒலிம்பிக்
    - 2022 மற்றும் 2026ல் பீஜிங்கில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்
- கோகோ-கோலா, இன்டெல், பானாசோனிக் மற்றும் விசா ஆகியோர் இதர விளம்பரதாரர் ஆவர்.

- - - - - - - - - - - - - - -